


# எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *2இராஜா 21:10-16; தானியேல் 1; கலா 2:19,.20; மத் 16:24-26; 2கொரி 4:17; யாக் 1:5.*

**மனன வசனம்:** இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார். தானியேல் 1:17.

விழுந்துபோன மனிதர்களின் பெலவீனங்களைச சுட்டிக்காட்ட வேதாகமம் தயங்கியதில்லை. மனிதனின் பாவ நிலையும் அதன் மோசமான விளைவுகளும் ஆதியாகமம் 3ம் அதிகாரத்திலிருந்தே சொல்லப்படுகின்றன. அதேநேரம், உண்மையின்றி வாழ அதிக சௌகரியங்களைப் பெற்ற நிலையில் தேவனுக்கு மிகுந்த உண்மையுடன் வாழ்ந்தவர்களைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு உண்மையாக வாழ்ந்தவர்களின் உதாரணங்கள் தானியேல் புத்தகத்தில் உள்ளன.

தானியேல் புத்தகத்தின் நாயகர் தேவன்தாம். தானியேலும் அவருடைய நண்பர்களும் உண்மையாக இருந்த சம்பவங்களை முக்கியப்படுத்துகிறோம்; ஆனால், அந்த நான்கு வாலிபர்களையும் தாங்கி, பாபிலோனின் மருட்சிக்கும் அதிகாரத்திற்கும்மத்தியில் வழிநடத்தின உண்மையுள்ள ஒருவரை பெரும்பாலும் மறந்துவிடுகிறோம். சொந்த நாட்டிலும் இடத்திலும் சவால் ஏற்பட்டால் உண்மையாக வாழ்ந்துவிடலாம்; அந்நிய தேசம், கலாச்சாரம் மற்றும் மார்க்கத்தின் மத்தியில் அத்தகைய சவால் உண்டானால், உண்மையாக வாழமுடியுமா? ஆனால் இந்த விசுவாச நாயகர்கள் அந்தச் சவாலை எதிர்கொண்டார்கள்; பவுலைப்போல, தாங்கள் ‘விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்பதை’ அறிந்திருந்து, அவரை நம்பினார்கள். 2தீமோ 1:12.

*2020*, ஜனவரி *11* வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## தேவனுடைய மேலதிகாரம்

தானியேல் புத்தகம் தோல்வி அறிகுறியுடன் துவங்குபோலத் தெரியலாம். யூதாவை நேபுகாத்நேச்சார் சிறைபிடித்தான். தேவாலயப் பாத்திரங்கள் எருசலேமிலிருந்து சிநேயார் தேசத்திற்குக் கொண்டுசெல் லப்பட்டன. பாபேல் கோபுரம் கட்டப்பட்ட இடம் சிநேயார் என்று ஆதி 11:2 சொல்கிறது. சிநேயார் ஒரு தீய அடையாளம்; தேவனை நேருக்கு நேராக எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டத்தைச் சுட்டிக்காட்டு கிறது. கோபுரத்தை வானுயரத்திற்குக் கட்டுவதில் அவர்கள் தோற்றா லும்கூட, நேபுகாத்நேச்சாரும் சிநேயார் தேசத்திலிருந்த அவனுடைய தெய்வங்களும் இஸ்ரவேலின் உடன்படிக்கை தேவனை வெற்றிக் கொண்டதுபோன்ற ஒரு பிம்பம் நிலவியது.

பாபிலோன் ராஜாவின் மேலாதிக்க வல்லமையால் எருசலேம் தோற்கவில்லையென தானியேலின் ஆரம்ப வரிகள் தெளிவுபடுத்து கின்றன; மாறாக, 'ஆண்டவர் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமை அவன் (நேபுகாத்நேச்சார்) கையில் ஒப்புக்கொடுத்தார்.' தானி 1:2. தம் மக்கள் தம்மை மறந்து, தம் உடன்படிக்கையை மீறினால், அந்நிய தேசத் திற்குச் சிறைப்பட்டுப் போவார்களென முன்னரே தேவன் சொல்லி யிருந்தார். எனவே பாபிலோனின் ராணுவ பலம் அல்ல, தேவனே வர லாற்றை வழிநடத்துவதை தானியேல் அறிந்திருந்தான். தேவனுடைய மேலாதிக்கம்பற்றி தெளிவாக அறிந்திருந்தது அந்த வாலிபர்களைத் தாங்கியது; பாபிலோன் சாம்ராஜ்யத்தின் தூண்டல்களையும் அழுத்தத் தையும் எதிர்கொள்ள பெலன் கொடுத்து, ஊக்குவித்தது.

**கேள்வி: யூதாவையும் எருசலேமையும் தேவன் பாபிலோனியர்களின் கரங்களில் ஒப்புக் கொடுத்தது ஏன்? 2இராஜா 21:10-16; 2இராஜா 24:18-20; எரே 3:13.**

இருபத்தோராம் நூற்றாண்டின் சவால்களை நாம் எதிர்கொள்கிற நிலையில், தானியேல் புத்தகம் தேவனைப்பற்றி தெளிவாகச் சொல்கிற கருத்து நம் மனதில் நிற்கவேண்டும். மேலதிகாரமுள்ள தேவன் வரலாற்று நிகழ்வுகளை நடத்திச் செல்பவர் மட்டுமல்ல, தேவையான நேரங்களில் உதவிசெய்ய தம் மக்களுடைய வாழ்வில் இரக்கத்தோடு தலையிடுகிறவராகவும் இருக்கிறாரென தானியேல் சொல்கிறது. முடிவுகால மக்கள்மேலும் அவர்களுடைய விசுவாசத்தின்மேலும் பல் வேறு தாக்குதல்கள் தொடுக்கப்படலாம்; ஆனால் அந்த எபிரெய கைதி களுக்கு தாம் செய்ததை முடிவுகாலத்திலுள்ள தம் மக்களுக்கும் செய் வாரெனப் பார்க்கப் போகிறோம்.

வெளியிலிருந்தோ சபைக்குள்ளிருந்தோ உங்களுடைய குணக்குறைபாடுகளிலிருந்தோ தற்சமயம் என்னென்ன சவால்களைச் சந்தித்துவருகிறீர்கள்? அந்தச் சவாலில் நீங்கள் வெற்றி பெறுவதற்கு தேவனுடைய வல்லமையை எவ்வாறு சார்ந்திருக்கப் போகிறீர்கள்?

# அழுத்தத்தின்கீழ் விசுவாசம்

**கேள்வி: என்னென்ன அழுத்தங்களுக்கு இணங்கும்படி அந்த வாலிபர்கள் நிர்பந்திக்கப் பட்டார்கள்? தானியேல் 1.**

பாபிலோனில் போய்ச் சேர்ந்ததுமே அந்த நான்கு வாலிபர்களின் விசுவாசத்தை கடுமையாகச் சோதிக்கிற சவால்கள் எழுகின்றன. அதாவது, ராஜாவின் பணிக்காக சிறப்புப் பயிற்சிக்குத் தேர்வுசெய்யப்படுகிறார்கள். கைதிகளில் திறமையானவர்களைத் தேர்வுசெய்து, அரண்மனையில் வேலைசெய்ய வைப்பது பண்டைய அரசர்களின் வழக்கம்; அவ்வாறு அரசன் மேலும், ராஜ்யத்தின் தேவர்கள்மேலும் மெய்ப்பற்று ஏற்பட வைத்தார்கள். கைதிகளின் மனதை மாற்றி, தங்கள் கொள்கையைப் புகுத்துவதே நோக்கம்; அதனால் கைதிகளின் உலகப்பார்வை மாறிப்போகும். அந்தச் செயல்முறையின் துவக்கமாக பெயர்களை மாற்றினார்கள். எஜமானும் எதிர்காலமும் மாறிவிட்டதை புதிய பெயர் சுட்டிக்காட்டியது. பெயர்களை மாற்றி அதிகாரம்செலுத்தவும், பாபிலோனின் விழுமியங்களையும் கலாச்சாரத்தையும் புகுத்தவும் பாபிலோனியர்கள் நினைத்தார்கள். இஸ்ரவேலின் தேவனைச் சுட்டிக்காட்டிய பெயர்களை, அந்நிய தேவர்களைக் கனப்படுத்துகிற பெயர்களாக மாற்றினார்கள். அந்த வாலிபர்கள் தன் பந்தியில் சாப்பிடவும் ராஜா ஏற்பாடுசெய்தான். முற்காலத்தில் ராஜாவின் பந்தியில் சாப்பிடுவது பல விஷயங்களை உள்ளடக்கியதாகும். அங்கே சாப்பிடுபவர் ராஜாவின்மேல் முழுப்பற்றுடன் இருப்பதையும், அவனையே சார்ந்திருப்பதையும் சுட்டிக்காட்டியது. தங்கள் தெய்வங்களுக்குப் படைத்த உணவுகளைப் பரிமாறுவார்கள்; எனவே, மார்க்கரீதியான விஷயங்களும் அதில் சம்பந்தப்பட்டிருந்தன. ராஜாவின் உணவைச் சாப்பிடுவது அவனது தொழுகைமுறையை அங்கீகரிப்பதாகும்.

இவையே தானியேலும் நண்பர்களும் சந்தித்த சவால்கள். ஏதாவது அற்புதம் நடந்தால்தான் தேவன்மேல் மெய்ப்பற்றுடன் இருக்கமுடியும்; சர்வாதிகார வல்லமையிடமிருந்து தப்பமுடியும். அடுத்தப் பிரச்சனை என்னவென்றால், பாபிலோன்தானே மனிதசாதனையின் நினைவுச்சின்னமாக இருந்தது. பாபிலோனிய கோவில்களின் கட்டிடக் கலையும், தொங்குதோட்டமும், நகரத்தின் ஊடே சென்ற ஐபிராத்து நதியும் பாபிலோன் ஈடுஇணையற்ற பராக்கிரமத்தோடும் மகிமையோடும் விளங்கியதுபோன்ற பிம்பத்தை ஏற்படுத்தியிருந்தது. அதன் செல்வச் செழிப்பையும் பயன்களையும் அனுபவித்து, வாழ்க்கையில் முன்னேற தானியேலுக்கும் நண்பர்களுக்கும் ஒரு வாய்ப்பு கிடைத்ததுபோலத் தெரிந்தது. எபிரெய அடிமைகள் என்பது மாறி, அரசஅதிகாரிகளாகலாம். கஷ்டமின்றி புகழின் உச்சிக்குச் செல்லலாம்; நியதிகளை விலைபேசி விடுவார்களா?

நம்பிக்கைகளை விலைபேச இந்த வாலிபர்கள் பகுத்தறிவான என்னென்ன காரணங்களைச் சொல்லியிருக்கலாம்? இதேபோல நயவஞ்சகமான என்னென்ன சவால்களைத் தற்போது சந்தித்து வருகிறீர்கள்?

# உறுதியான தீர்மானம்

**கேள்வி: தானியேல் 1:7-20இல் இரண்டு விஷயங்கள் செயல்படுகின்றன; ஒன்று, தானியேலின் தெரிந்துகொள்ளும் உரிமை, அடுத்தது தேவனுடைய தலையீடு. இதில் காணப்படும் முக்கிய நியதி என்ன?**

---

---

அந்த நான்கு எபிரெயக் கைதிகளும் புதிய பெயர் வேண்டாமென எதிர்க்கவில்லை. தங்களுக்குள்ளேயே தங்கள் எபிரெய பெயர்களால் அழைத்திருக்கலாம்; அவ்வளவுதான். ஆனால், ராஜாவின் போஜனத்தையும் திராட்ச ரசத்தையும் அனுமதிப்பதும், மறுப்பதும் அவர்களுடைய கரத்தில் இருந்தது. அந்த நால்வரும் தெரிந்துகொள்ளும் சுதந்தரத்தைப் பயன்படுத்தியவிதம் கவனிக்கத்தக்கது.

**கேள்வி: பெயரை மாற்ற அதிகாரமுள்ள அதிகாரிக்கு உணவை மாற்ற அதிகாரமிருக்காதா?**

ராஜபோஜனத்தை நால்வரும் மறுத்ததற்கு இரண்டு காரணங்கள் இருந்திருக்கலாம்.

**முதலாவது,** ராஜாவின் போஜனப் பதார்த்தங்களில் அசுத்தமான உணவுகளும் இருந்திருக்கும். லேவி 11.

**இரண்டாவது,** சிலைக்குமுன்னால் போஜனத்தைப் படைத்தபிறகே ராஜா புசிக்கும்படி கொண்டுவருவார்கள். அந்த வஞ்சகத்தில் விழாமலிருக்க தானியேல் கோரிக்கைவைக்கிறான்; தானும் தன் நண்பர்களும் அரண்மனை உணவால் தீட்டுப்படக்கூடாதென்கிற ஆவிக்குரிய வைராக்கியம். உண்மையிலேயே பெரிய தைரியசாலிதான்.

தானியேலுக்கும் பாபிலோனிய அதிகாரிக்கும் இடையே நடந்த உரையாடலில் சில முக்கிய விஷயங்களைக் கவனிக்கமுடிகிறது.

**முதலாவது,** அதிகாரியின் இக்கட்டான நிலை தானியேலுக்குப் புரிந்தது. அதனால்தான் சோதித்துப் பார்க்கச் சொல்கிறான். பத்து நாட்கள் மாற்று உணவுகளைச் சாப்பிட அனுமதிக்கவேண்டும்; நல்ல மாற்றம் தெரிந்தால் அதிகாரி பயப்பட வேண்டியதில்லை.

**இரண்டாவது,** சில நாட்களில் நல்ல மாற்றம் தெரியுமென தானியேல் சொன்னதில், தேவனில் அவனுக்கிருந்த அசையா நம்பிக்கை தெரிகிறது.

**மூன்றாவது,** மரக்கறிகளையும் தண்ணீரையும் அவன் கேட்டது, சிருஷ்டிப்பில் தேவன் மனிதர்களுக்குக் கொடுத்த உணவைக் குறிக்கிறது. பார்க்கவும்: ஆதி 1:29. தானியேல் இந்தத் தீர்மானத்தைச் செய்ததற்கு அது காரணமாக இருந்திருக்கலாம். தேவன் ஆதியில் கொடுத்த உணவுகளைவிட சிறந்த உணவு ஏதாவது இருக்கமுடியுமா?

தானியேல் 1:9 சொல்வது போல தேவன் செயல்பட்டதற்கு, தானியேலின் தெரிந்துகொள்ளும் சுதந்தரம் எவ்வாறு முக்கியக் காரணமாக இருந்தது? நம்முடைய தீர்மானங்கள் முக்கியமானவை என்பதை இது எவ்வாறு காட்டுகிறது? தேவன்மேலுள்ள நம்பிக்கை எவ்வாறு நம் தீர்மானங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்?

# மாசில்லாதவர்களும் ஞானிகளும்

அரசப்பணியாளர்களுக்கு இன்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமென நேபுகாத்நேச்சார் வகுத்திருந்த சட்டத்திற்கு தானியேலும் அவனது நண்பர்களும் பொருத்தமாக இருந்ததால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அரண்மனை அதிகாரிகள் மாசில்லாதவர்களும் அழகானவர்களுமாக இருப்பதை ராஜா விரும்பினான். தானி 1:3. ஆசரிப்புக் கூடாரப்பலிகளும் ஊழியர்களும் கூட 'பழுதில்லாமல்' இருக்கவேண்டியிருந்தது. லேவி 22:17-25; 21:16-24. பாபிலோன் ராஜா இஸ்ரவேலின் தேவனுக்கு இணையாக தன்னைக் கருதியிருக்க வேண்டும்; அதனால்தான் தன் அரண்மனை ஊழியர்களிடம் அந்தத் தகுதிகளை எதிர்பார்த்தான். ஆனால், தானியேலும் அவனுடைய நண்பர்களும் ஜீவனுள்ள பலிகளாக இருந்ததை அந்தத் தகுதிகள் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகின்றன; ஏனென்றால், பாபிலோனின் சவால்களுக்குமத்தியில் அவர்கள் வாழ்ந்துவந்தார்கள்.

**கேள்வி: பாவத்தூண்டல்களுக்கு மத்தியிலும் உண்மையுடன் வாழலாம் என்பதை கலா 2:19,20; மத் 16:24-26; 2கொரி 4:17 வசனங்கள் எவ்வாறு சொல்கின்றன?**

அந்த நான்கு எபிரெயக் கைதிகளின் மெய்ப்பற்றை தேவன் கனப்படுத்துகிறார். 10 நாள் சோதனைக்கு பிறகு, அரச போஜனங்களைச் சாப்பிட்ட மற்றவர்களைவிட அதிக சரீரக்களையுடனும் புஷ்டியுடனும் இருந்தார்கள். தம் தாசர்களான அந்த நால்வருக்கும் தேவன் 'சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தைக்' கொடுக்கிறார்; தானியேலுக்குமட்டும் 'சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவைக்' கொடுக்கிறார். தானி 1:17. இந்த ஈவு தானியேலின் தீர்க்கதரிசன ஊழியத்தில் முக்கியப் பங்காற்றவிருந்தது.

பாபிலோனிய அரசவையில் உண்மையுடன் இருந்த தம் தாசர்களை தேவன் கனப்படுத்தியதுபோல, உலகத்தில் சவால்களைச் சந்திக்கும்போது நமக்கு ஞானத்தைத் தருகிறார். சமுதாயத்தின் சீர்கேடான விஷயங்கள் நம்மைத் தீட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதை தானியேலின் அனுபவமும் அவனுடைய நண்பர்களின் அனுபவமும் காட்டுகின்றன. தேவனைச் சேவிப்பதற்காக சமுதாயத்திலிருந்தும் அதன் கலாச்சாரத்திலிருந்தும் ஒதுங்கவேண்டியதில்லை என்பதும் புரிகிறது. தானியேலும் அவனுடைய நண்பர்களும் பொய்களையும் தவறுகளையும் கட்டுக்கதைகளையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு கலாச்சாரத்தில் வாழ்ந்தார்கள்; அந்தப் பொய்களும் தவறுகளும் கட்டுக்கதைகளும்தான் பாடமாக அவர்களுக்கு நடத்தப்பட்டன. ஆனாலும், அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள்.

நாம் எங்கு வாழ்ந்தாலும், நம் நம்பிக்கைக்கு எதிரான கலாச்சார, சமுதாய செல்வாக்குகள் நிலவினால், உண்மையுடன் வாழ்வது சவாலாகிவிடும். உங்களுடைய கலாச்சாரத்தில் என்னென்ன மோசமான செல்வாக்குகள் உள்ளன; எவ்வளவு தூரம் அவற்றை அடையாளம் காண்கிறீர்கள்?

# இறுதி சோதனை

**கேள்வி: தானி 1:17-21ஐ வாசியுங்கள். அந்த நால்வரின் வெற்றிக்கு முக்கியக் காரணமாக இருந்தது என்ன? பார்க்கவும்: யோபு 38:36; நீதி 2:6; யாக் 1:5.**

---

'பாபிலோனிய பல்கலைக்கழக்ததில்' மூன்று வருடப் பயிற்சியை முடித்தபிறகு, இறுதிப் பரீட்சைக்காக அந்த நான்கு எபிரெயர்களும் ராஜாமுன் கொண்டுவரப்பட்டார்கள். மற்ற மாணவர்களைவிட சரீரக் களையில் மட்டுமல்ல, அறிவிலும் ஞானத்திலும்கூட சிறந்து காணப்பட்டார்கள். அஞ்ஞான மார்க்க விஷயங்களிலும் அவர்கள் அறிவிலும் ஞானத்திலும் சிறந்திருக்க வேண்டும்; அவற்றை அவர்கள் நன்கு கற்றுக் கொண்டார்கள்; ஆனால் நம்பவில்லை.

அரண்மனை உணவும், பயிற்சித் திட்டமும்தான் அந்த வெற்றிக்கு காரணமென நேபுகாத்நேச்சார் நினைத்திருக்கலாம். ஆனால், அந்த நால்வரின் ஒப்பற்ற செயல்திறனுக்கும் பாபிலோனிய முறைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை; அது தானியேலுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் தெரியும்; அந்தச் சம்பவமும் அப்படித்தான் சொல்கிறது. அனைத்தும் தேவனிடமிருந்து வருகிறது. தம்மை நம்புகிறவர்களுக்கு தேவன் என்ன செய்யமுடியும் என்பதற்கு வல்லமையான உதாரணம். தேவபிள்ளைகளென்கிற நம் அடையாளத்தை ஊடகமும் அரசாங்கங்களும் பிற ஏற்பாடுகளும் அழித்துவிடும்போல் அச்சுறுத்தும்போது நாம் பயப்படக்கூடாது. தேவனில் நம்பிக்கையுடன் இருந்தால், கடினமான தருணங்களிலும் அவர் நடத்துவார்; சகல தீமைகளிலிருந்தும் பாதுகாப்பார். நம் விசுவாசத்திற்கு சவால்கள் எழும்போது, நம்முடைய தீர்மானங்களில் கவனமுள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும்.

தானியேலில் தேவனைப்பற்றி சில முக்கியப் பாடங்கள் உள்ளன.

1. தேவனுடைய கட்டுப்பாட்டில் வரலாறு இருக்கிறது.
2. சமுதாயத்திலும் கலாச்சாரத்திலும் நமக்கு எதிரான சூழலை எதிர்கொள்ள தேவன் ஞானம்தருகிறார்
3. தம்மை நம்புகிறவர்களை மனதிற்குள் உணர்த்தியும், வாழ்க்கை முறையை மாற்றியும் தேவன் கனப்படுத்துகிறார்.

---

'கோரேஸ் ராஜ்யபாரம்பண்ணும் முதலாம் வருஷமட்டும் தானியேல் அங்கே இருந்தான்' என்று அந்த அதிகாரம் முடிகிறது. தானி 1:21. சிறையிருப்பின்மத்தியிலும் நம்பிக்கை உண்டு என்பதற்காக கோரேஸின் பெயர் சொல்லப்படுகிறது. தேவ மக்களை விடுவித்து, அவர்களை மீண்டும் எருசலேமுக்கு அனுப்புவதற்கு தேவன் தெரிந்துகொண்ட கருவிதான் கோரேஸ். தோல்வி, சிறையிருப்புடன் ஆரம்பிக்கிற அதிகாரம், நம்பிக்கை மற்றும் வீடுதிரும்புதலின் செய்தியுடன் முடி கிறது. இதுதான் நம் தேவன்; நம் வாழ்க்கையின் இக்கட்டான நேரங்களிலும்கூட, நம்பிக்கையின் கதவை அவர் திறக்கிறார்; வேதனைக் கும் உபத்திரவத்திற்கும் அப்பால் இருக்கிற மகிமையையும் சந்தோஷத்தையும் அதனூடே நாம் பார்க்கமுடிகிறது. இது எவ்வாறு உங்களை ஊக்கப்படுத்தமுடியும்?

## மேலும் படிக்க:

‘எகிப்தில் யோசேப்பின் ஆரம்பக்காலங்களைவிட பாபிலோனில் தானியேலும் அவனுடைய நண்பர்களும் இளம் வயதில் அதிக சாதகமான சூழலில் இருந்தார்கள். ஆனால், அவர்களுடைய குணங்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் சாதாரணமானவை அல்ல. இந்த அரசகுல வாலிபர்கள் யூதாவில் தாங்கள் இருந்த இடங்களைவிட மிகப் பிரமாண்டமான நகரங்களுக்கும், அங்கிருந்த பேரரசனுடைய அரண்மனைக்கும் கொண்டுசெல்லப்பட்டு, ராஜாவின் பணிக்கு சிறப்பாகப் பயிற்றுவிக்கப்பட்டார்கள். சீர்கேடும் ஆடம்பரமும்மிக்க அந்த அரசவையின் பலமான பாவத்தூண்டல்கள் அவர்களைச் சூழ்ந்திருந்தன. யெகோவை வழிபடுபவர்கள் பாபிலோனில் சிறைக் கைதிகளாக இருந்தார்கள். தேவாலயப்பாத்திரங்கள் பாபிலோனிய தேவர்களுடைய ஆலயங்களில் வைக்கப்பட்டிருந்தன; இஸ்ரவேலின் ராஜாதானே பாபிலோனியரிடம் சிறைப்பட்டிருந்தான்; எனவே, வெற்றிமிதப்பில் இருந்தவர்கள் எபிரெயர்களுடைய மார்க்கத்தையும் பழக்கவழக்கங்களையும்விட தங்களுடைய மார்க்கமும் பழக்கவழக் கங்களும் சிறந்ததென மார்தட்டினார்கள். தம்முடைய கற்பனைகளைவிட்டு விலகியதால் இஸ்ரவேலர்தாமே வருவித்துக்கொண்ட அந்த நிந்தனைகளுக்குமத்தியிலும் தம்முடைய மேலதிகாரம், தம்முடைய கட்டளைகளின் பரிசுத்தம், கீழ்ப்படிதலின் நிச்சய விளைவு போன்றவற்றை உறுதியான ஆதாரத்துடன் பாபிலோனுக்கு தேவன் தெரியப்படுத்தினார். தம்மில் மெய்ப்பற்றுள்ளவர்கள் மூலமாகவே இந்தச் சாட்சியை அவர் கொடுத்தார், அப்படிப்பட்டவர்கள் மூலமாக மட்டுமே கொடுக்கவும் முடியும்.’ *Ed, p 54.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *கிறிஸ்தவர்களாக நீங்கள் உங்களுடைய கலாச்சாரத்திலும் சமுதாயத்திலும் சந்திக்கும் சவால்கள்பற்றி வகுப்பில் கலந்தாலோசியுங்கள். அவை என்ன? சபையாகச் சேர்ந்து, அவற்றை எதிர்கொள்ள என்ன செய்யலாம்?*

2 *சாதாரண காரணங்களைச் சொல்லி, தானியேலும் மற்றவர்களும் தங்களுடைய விசுவாசத்தை விலைபேசியிருக்கலாம். அவர்களைச் சிறைப்பிடித்திருந்தவர்கள் பாபிலோனியர்கள் அல்லவா! யூததேசம் தோற்றுப்போய், சிறைப்பட்டுச் சென்றிருந்தது. இஸ்ரவேலின் தேவனைவிட பாபிலோனின் ‘தேவர்கள்’ பெரியவர்கள் என்பதற்கும், தானியேலும் அவனுடைய நண்பர்களும் அதை ஆமோதிப்பதற்கும் இதை ‘ஆதாரமாகக்’ காட்டியிருக்கலாம் அல்லவா? அந்த இக்கட்டான நேரத்தில் தங்களைத் தாங்குவதற்கு வேதாகமத்தின் எந்தச் சத்தியங்களை உறுதியாகப் பிடித்திருப்பார்கள்? பார்க்கவும்: எரேமியா 5:19; 7:22-34. வேதாகமத்தை வாசித்து, ‘தற்கால சத்தியத்தை’ அறிந்திருப்பதின் முக்கியத்துவத்தை இது எவ்வாறு வலியுறுத்துகிறது?*

3 *உண்மையுடன் வாழ்வது நமக்கு மட்டுமல்ல, நம் உண்மையுள்ள சாட்சியானது நாம் ஊழியம்செய்கிற மக்களுக்கு ஆண்டவருடைய குணத்தை வெளிப்படுத்துவதற்கும் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. அது எவ்வாறு?*